உ

ஓம் சிவமயம்



யாழ் அச்சுவேலியைப் பிறப்பிடமாகவும்,

கொழும்பு, இலண்டன் ஆகிய இடங்களை வதிவிடமாகவும் கொண்ட

**திருமதி. பிருந்தா குணசேகரம்** அவர்கள்

**இறைபதம் எய்தியமை குறித்த**

# நினைவு மலர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமர்ப்பணம்

இப்பூவுலகில் எம் நலத்திற்கும்,
வளர்ச்சிக்கும் மெழுகுவர்த்தியாகி
உருகி ஒளியூட்டி, ஆல மரமாகஎம் குடும்பத்திற்கு
நிழல் பரப்பி எம்மையெல்லாம் அன்போடும்
பண்போடும் பாசத்தோடும் வளர்த்து
நல்வழிகாட்டி, நற்கல்வியூட்டி,
உறுதுணையாக இருந்து
சொந்தபந்தங்கள் அனைவருக்கும்
பக்கபலமாய் இருந்துசீரும் சிறப்புடன் வாழவைத்து,
மனிதருள் மாணிக்கமாய், குடும்பத்தின் தலைவியாய்,
தாயாய்மனம் பலமாண்புடன் பரப்பி
இனமெல்லாம் இன்புடன் வாழ ஏற்ற நற்பணிகள்
காத்துவையத்துள் என்றும்
நீங்கா ஒளியாகத் திகழும்
அன்புத் தெய்வத்தின் பாதக் கமலங்களிற்கு
இவ்வினியமலரினைக்
காணிக்கையாக்குகின்றோம்.

ஓம் சாந்தி! சாந்தி! சாந்தி
என்றும் நீங்காநினைவுகளுடன்

**குடும்பத்தினர்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# அமரர் திருமதி பிருந்தா குணசேகரம்

அன்னை மடியில்

05 * 06 * 1960



ஆண்டவன் அடியில்

10 * 11 * 2017

## திதி வெண்பா

ஆண்டு ஏவிளம்பி அமைந்த ஐப்பசித்திங்கள்
பூண்ட அபரபக்க அட்டமியில் - மாண்பு
குணசேகரம் பத்தினியார் பிருந்தா அம்மை
கணநாதன் கழலடைந்தார் காண்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

சிவமயம்



பஞ்சபுராணம்

## விநாயகர் காப்பு

ஐந்து கரத்தனை ஆனை முகத்தனை
இந்தின் இளம்பிறை போலும் எயிற்றனை
நந்தி மகன்றனை ஞானக் கொழுந்தினை
புந்தியில் வைத்தடி போற்றுகின்றோமே

## தேவாரம்

தோடுடையசெவி யன்விடையேறியோர் தூவெண்மதிசூடி
காடுடைய சுடலைப்பொடி பூசியென் னுள்ளங்கவர்கள்வன்
ஏடுடையயமல ரான் முனைநாட்பணிந் தேத்தவருள்செய்த
பீடுடையபிர மாபுரமேவிய பெம்மானிவனன்றே

(திருஞானசம்பந்தர்)

சொற்றுணை வேதியன் சோதிவானவன்
பொற்றுணை திருந்தடி பொருந்தக் கைதொழக்
கற்றுணை பூட்டி யோர் கடலிற் பாய்ச்சினும்
நற்றுணை யாவது நமச்சி வாயவே (திருநாவுக்கரசர்)

பித்தாபிறை சூடி பெரு மானேயருளாளா
எத்தான்மற வாதே நினைக் கின்றேன் மனத்துன்னை
வைத்தாய் பெண்ணைத் தென்பால் வெண்ணெய்
நல்லூ அருட்டுறையுள்
அத்தாவுனக் காளாயினி அல்லேனெனலாமே

(சுந்தரர்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருவாசகம்

பால்நினைந் தூட்டுந் தாயினுஞ் சாலப்
பரிந்துநீ பாவியே னுடைய
ஊனினை உருக்கி உள்ளொளி பெருக்கி
உலப்பிலா ஆனந்த மாய
தேனினைச்சொரிந்து புறம்புறந் திரிந்த
செல்வமே சிவபெரு மானே
யானுனைத் தொடர்ந்து சிக்கெனப் பிடித்தேன்
எங்கெழுந் தருளுவ தினியே

(மாணிக்கவாசகர்)

## திருவிசைப்பா

ஒளிவளர் விளக்கே உலப்பிலா ஒன்றே
உணர்வுசூழ் கடந்ததோர் உணர்வே
தெளிவளர் பளிங்கின் திரள்மணிக் குன்றே
சித்தத்துள் தித்திக்கும் தேனே
அளிவளர் உள்ளத்து ஆனந்தக் கனியே
அம்பலம் ஆடரங் காக
வெளிவளர் தெய்வக் கூத்துகந் தாயைத்
தொண்டனேன் விளம்புமா விளம்பே

(திருமாளிகைத்தேவர்)

## திருப்பல்லாண்டு

மன்னுக தில்லை வளர்கநம்
பக்தர்கள் வஞ்சகர் போயகல
பொன்னின்செய் மண்டபத் துள்ளே புகுந்து
புவனி யெல்லாம் விளங்க
அன்னநடை மடவாள் உமைகோன்
அடியோ முக்கருள் புரிந்து
பின்னைப் பிறவியறுக்க நெறிதந்த
பித்தற்குப் பல்லாண்டு கூறுதுமே

(சேந்தனார்)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## திருப்புராணம்

உலகெலாம் உணர்ந்து ஓதுதற்கு அரியவன்
நிலவு லாவிய நீர்மலி வேணியன்
அலகில் சோதியன் அம்பலத் தாடுவான்
மலர் சிலம்படி வாழ்த்தி வணங்குவாம் (சேக்கிழார்)

## திருப்புகழ்

பக்தியால் யானுனைப் பலகாலும்
பற்றியே மாதிருப் புகழ்பாடி
முக்தனா மாறெனைப் பெருவாழ்வின்
முக்தியே சேர்வதற் கருள்வாயே
உத்தம தானசற் குணர்நேயா
ஒப்பிலா மாமணிக் கிரிவாசா
வித்தகா ஞானசற் திநிபாதா
வெற்றி வேலாயுதப் பெருமாளே

(அருணகிரிநாதர்)

## வாழ்த்து

வான்முகில் வழாது பெய்க மலிவளம் சுரக்க மன்னன்
கோன்முறை அரசு செய்க குறைவிலாது உயிர்கள் வாழ்க
நான்மறை அறங்கள் ஓங்க நற்றவம் வேள்விமல்க
மேன்மைகொள் சைவநீதி விளங்குக உலகமெல்லாம்

- (காசியப்பசுவாமி)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

திருச்சிற்றம்பலம்



தொல்லையிரும் பிறவிசூழும் தளை நீக்கி
அல்லலறுத் தானந்தம் ஆக்கியதே – எல்லை
மருவா நெறியளிக்கும் வாதவூர் எங்கோன்
திருவாசகம் என்னும் தேன்

## சிவபுராணம்

நமச்சிவாய வாழ்க நாதன்தாள் வாழ்க
இமைப்பொழுதும் என்நெஞ்சில் நீங்காதான் தாள்வாழ்க
கோகழி யாண்ட குருமணிதன் தாள்வாழ்க
ஆகம மாகிநின்று அண்ணிப்பான் தாள்வாழ்க

ஏகன் அனேகன் இறைவன் அடிவாழ்க
வேகம் கெடுத்தாண்ட வேந்தனடி வெல்க
பிறப்பறுக்கும் பிஞ்ஞகன்றன் பெய்கழல்கள் வெல்க
புறத்தார்க்குச் சேயோன்தன் பூங்கழல்கள் வெல்க

கரங்குவிவார் உள்மகிழும் கோன்கழல்கள் வெல்க
சிரங்குவிவார் ஓங்குவிக்கும் சீரோன்கழல் வெல்க
ஈசனடி போற்றி எந்தைஅடி போற்றி
தேசனடி போற்றி சிவன்சேவடி போற்றி

நேயத்தே நின்ற நிமலனடி போற்றி
மாயப் பிறப்பறுக்கும் மன்னனடி போற்றி
சீரார் பெருந்துறைநம் தேவனடி போற்றி
ஆராத இன்பம் அருளும்மலை போற்றி

சிவனவனென் சிந்தையுள் நின்ற அதனால்
அவனரு ளாலே அவன்தாள் வணங்கிச்
சிந்தை மகிழச் சிவபுராணந் தன்னை
முந்தை வினைமுழுதும் ஓய உரைப்பன்யான்

கண்ணுதலான் தன்கருணைக் கண்காட்ட வந்தெய்தி
எண்ணுதற் கெட்டா எழிலார் கழலிறைஞ்சி
விண்ணிறைந்து மண்ணிறைந்து மிக்காய் விளங்கொளியாய்
எண்ணிறந் தெல்லை யிலாதானே நின்பெருஞ்சீர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொல்லா வினையேன் புகழுமா றென்றறியேன்
புல்லாகிப் பூடாய் புழுவாய் மரமாகிப்
பல்விருக மாகிப் பறவையாய்ப் பாம்பாகிக்
கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய்

வல்லசுர ராகி முனிவராய்த் தேவராய்ச்
செல்லாஅ நின்றஇத் தாவர சங்கமத்துள்
எல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தேன் எம்பெருமான்
மெய்யேஉன் பொன்னடிகள் கண்டின்று வீடுற்றேன்
உய்ய என் உள்ளத்துள் ஓங்கார மாய்நின்ற

மெய்யா விமலா விடைப்பாகா வேதங்கள்
ஐயா எனஓங்கி ஆழ்ந்தகன்ற நுண்ணியனே
வெய்யாய் தணியாய் இயமான னாம் விமலா
பொய்யா யினவெல்லாம் போயகல வந்தருளி

மெய்ஞ்ஞான மாகி மிளிர்கின்ற மெய்ச்சுடரே
எஞ்ஞான மில்லாதேன் இன்பப் பெருமானே
அஞ்ஞானம் தன்னை அகல்விக்கும் நல்லறிவே
ஆக்கம் அளவிறுதி இல்லாய் அனைத்துலகும்
ஆக்குவாய் காப்பாய் அழிப்பாய் அருள்தருவாய்
போக்குவாய் யென்னைப் புகுவிப்பாய் நின்தொழும்பில்
நாற்றத்தின் நேரியாய் சேயாய் நணியானே
மாற்றம் மனம்கழிய நின்ற மறையோனே

கறந்தபால் கன்னலொடு நெய்கலந்தாய் போலச்
சிறந்தடியார் சிந்தனையுள் தேனூறி நின்று
பிறந்த பிறப்பறுக்கும் எங்கள் பெருமான்
நிறங்களோர் ஐந்துடையார் விண்ணோர்கள் ஏத்த

மறைந்திருந்தாய் எம்பெருமான் வல்வினையேன் தன்னை
மறைந்திட மூடிய மாய இருளை
அறம்பாவம் என்னும் அருங்கயிற்றால் கட்டிப்
புறந்தோல் போர்த்தெங்கும் புழுவழுக்கு மூடி


மலஞ்சோரு மொன்பது வாயிற் குடிலை
மலங்கப் புலனைந்தும் வஞ்சனையைச் செய்ய
விலங்கு மனத்தால் விமலா உனக்குக்
கலந்த அன்பாகிக் கசிந்துள் உருகும்
நலந்தான் இலாத சிறியேற்கு நல்கி
நிலந்தன்மேல் வந்தருளி நீழ்கழல்கள் காட்டி
நாயிற் கடையாய் சிந்த அடியேர்க்கு
தாயிற் சிறந்த தயாவான தத்துவனே

(தொடர்ச்சி பக்கம் 8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திருமதி பிருந்தா குணசேகர




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ரம் அவர்களின் வம்சாவழி




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மாசற்ற சோதி மலர்ந்த மலர்ச்சுடரே
தேசனே தேனார் அமுதே சிவபுரனே
பாசமாம் பற்றறுத்துப் பாரிக்கும் ஆரியனே
நேசஅருள் புரிந்து நெஞ்சில் வஞ்சங்கெடப்

பேராது நின்ற பெருங்கருணைப் பேராறே
ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே
ஓராதார் உள்ளத்து ஒளிக்கும் ஒளியானே
நீராய் உருக்கியென் ஆருயிராய் நின்றானே
இன்பமும் துன்பமும் இல்லானே உள்ளானே
அன்பருக்கு அன்பனே யாவையுமா யல்லையுமாம்
சோதியனே துன்னிருளே தோன்றாப் பெருமையனே
ஆதியனே அந்தம் நடுவாகி அல்லானே

ஈர்த்தென்னை யாட்கொண்ட எந்தை பெருமானே
கூர்த்தமெஞ் ஞானத்தால் கொண்டுணர்வார் தம்கருத்தின்
நோக்கரிய நோக்கே நுணுக்கரிய நுண்ணுணர்வே
போக்கும் வரவும் புணர்வுமிலாப் புண்ணியனே

காக்குமெங் காவலனே காண்பரிய பேரொளியே
ஆற்றினி வெள்ளமே அத்தாமிக்காய் நின்ற
தோற்றச் சுடரொளியாய்ச் சொல்லாத நுண்ணுணர்வாய்
மாற்றமாம் வையகத்தின் வெவ்வேறே வந்தறிவாம்

தேற்றனே தேற்றத் தெளிவேஎன் சிந்தனையுள்
ஊற்றான உண்ணார் அமுதே உடையானே
வேற்று விகார விடக்குடம்பின் உட்கிடப்ப
ஆற்றேனெம் ஐயா அரனேயோ என்றென்று

போற்றிப் புகழ்ந்திருந்து பொய்கெட்டு மெய்யானார்
மீட்டிங்கு வந்து வினைப்பிறவி சாராமே
கள்ளப் புலக்குரம்பைக் கட்டழிக்க வல்லானே
நள்ளிரவில் நட்டம் பயின்றாடும் நாதனே

தில்லையுள் கூத்தனே தென்பாண்டி நாட்டானே
அல்லற் பிறவி அறுப்பானே ஓவென்று
சொல்லற் கரியானைச் சொல்லித் திருவடிக் கீழ்ச்
சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்

செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக் கீழ்ப்
பல்லோரும் ஏத்தப் பணிந்து.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அமரர் **திருமதி பிருந்தா குணசேகரம்** அவர்களின் வாழ்க்கை வரலாறு

இயற்கை வளம் நிறைந்து விளங்கும் யாழ்ப்பாணக் குடாநாட்டில் வந்தாரை வாழவைத்து வருவோரைக் காத்திருக்கும் பெரியோர்கள் உறைகின்ற அச்சுவேலியம்பதியில் திரு சோமசுந்தரம், திருமதி தவமணி சோமசுந்தரம் தம்பதிகளின் செல்வப்புதல்வியாக பிருந்தா 05.06.1960 இல் பிறந்தார். அவருக்கு சிற்சபேசன் என்னும் சகோதரனும் சுகந்தா என்னும் சகோதரியும் உண்டு. இவர் பிறந்து ஒரு மாதத்தில் இவரை இவரது பெற்றோர் கொழும்புக்கு அழைத்து வந்து விட்டனர்.

இவர் தன் இளமைப்பிராயத்தில் கொழும்பு வெள்ளவத்தையில் அமைந்துள்ள St. Claire's Girls School இல் கல்வி கற்றார். அதன் பின்னர் TATA Industries இல் பிரத்தியேக செயலாளராகக் கடமையாற்றினார்.

நாட்டின் போர்ச்சூழல் காரணமாக 1988 இல் இலண்டனுக்கு இடம்பெயர்ந்தார். இங்கு திரு ஆறுமுகம் குணசேகரம் அவர்களை மணம் புரிந்து சிறப்பாக இல்வாழ்க்கை நடாத்தி வந்தார். தம்பதிகளின் இல்வாழ்வின் நற்பயனாய் நிசாந்த் நிரோஷன் ஆகிய ஆண்மக்களைப் பெற்று அவர்களை சிறந்த முறையில் கல்வி கற்க வைத்து நன்மக்களாக்கினார்.

தனது அயராத முயற்சியால் பிரித்தானியாவில் சிறந்த வியாபார ஸ்தலமான நிசா Food and Wine நிறுவனத்தை ஆரம்பித்து சிறப்போடு நடாத்தினார். இப்படி நல்வாழ்க்கை வாழ்ந்த வரும் காலத்தில் 10.11.2017 அன்று இறைவன் திருவடி நிழலை அடைந்தார்.

அன்னாரின் ஆத்மா சாந்தியடைவதாக.

ஓம் சாந்தி சாந்தி சாந்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணவன் புலம்பல்

காலம் எல்லாம் துணையாக என் கரம்பற்றி நின்றீரே,
உம் காலடியில் நான் கிடந்தது பணி புரிய தினம் துடித்தேன்,
காலன்தான் உமைக்கவர்ந்து என்னைத் தவிக்க வைத்தானோ,
கண்ணை இமை காப்பது போல் எம்மைக் காத்து வந்தீரே,
உம் கண்மணிகள் கதறியழும் காட்சியை என்னால் தாங்க முடியவில்லை,

கலங்கி நிற்கின்றேன் என் அன்பு மனைவியே

***

## மகன் புலம்பல்

அம்மா நீங்கள் எம்மோடு வாழ்ந்துவிட்டு,
என்னை, பாசமுடன் தாலாட்டி, ஆசையுடன் முத்தமிட்டு,
பண்பான பழக்கவழக்கத்தையும் படிப்பையும் தந்துவிட்டு,
கண்ணோடு இமையாக நம்மோடு இருந்துவிட்டு,
எங்களை விட்டுச் சென்றீரோ இங்கு நாம் தவிக்கின்றோம்,
ஒன்றுமே சொல்லாமல் எம்மைப் பிரிந்து விட்டீரே,
இறைவனுடன் சேர்ந்தெங்கள் தெய்வமாய் மாறியதால்,
இமைக்கும் பொழுதெல்லாம் எம்மை காத்து வருவீரே!
எங்கள் குடும்பத்தின் ஒளிவிளக்கே நீங்கள்!
உங்கள் அரவணைப்பின்றித் தவிக்கின்றோம் நாங்களிங்கே
மாதம் ஒன்றானாலும் ஆறவில்லை எம்துயரம்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மீண்டுமொரு பிறப்பிருந்தால் எங்களிடமே வந்திடுங்கள்!
உயிர் தந்து உடல் தந்து உழைப்பையும் தந்தீர்கள்!
உடனிருந்து அரவணைத்து உணவளித்துக் காத்தீர்கள்
துணிவுடன் தன்னம்பிக்கையை ஊட்டி வளர்த்தீர்கள்
தூயவராய் நாம்வாழ வழியமைத்துத் தந்தீர்கள்!
எங்களின் உயர்வுக்கு நீங்களே வழிகாட்டியம்மா
உங்களின் பிரிவின்றி வேறுகுறை இல்லையம்மா
எங்களின் தோட்டத்தில் வாசமலர் நீங்களம்மா
எங்களின் மாலையிலிருந்து ஏன்வாடி உதித்தீர்கள்!
கைவண்ணம் கண்டவுடன் கண்கள் நனைகின்றன
மெய்வண்ணம் நினைந்தவுடன் மேனியெல்லாம் எரிகின்றது
இல்லறக் கடமையெல்லாம் இனிதே முடித்தீரென்று
தன்னடியில் அமைதிகொள்ள இறைவன் அழைத்தானோ!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய், சின்னம்மாமார் புலம்பல்

எங்கள் அருமை மகளே!!!
காலை கண்விழித்த நொடி முதல் உன் ஞாபகங்கள்
உன் நினைவுகள் எங்கள் மனதில், அழியா சுவடுகளாய்
பதிந்துள்ளன.
நீ இல்லாத வாழ்க்கை, நரகமாய் உள்ளது மகளே!!
உன்னைப் பிரிந்த நாள் முதல் இன்று வரை,
உன் அன்பிற்கு இணை யாருமில்லை
உன் பாசத்திற்கு ஏங்கும் எங்கள் ஏக்கங்கள்
உணர முடியாத வலியாய் எங்களைக் கொல்கிறது.
நீ வேண்டும் எங்களுக்கு, உன்னுடன் வாழ்ந்த
அந்த பொக்கிஷமான நாட்கள் மீண்டும் வேண்டும்
ஓயாத நினைவுகள் எங்கள் உள்ளத்தில் தந்தாய்
உன் அழகான முகம், அன்பான மனம்,
உன் குழந்தைக் குணம், கொடுக்கும் குணம்,
இதையெல்லாம் நினைத்துப் பார்க்க,
ஒரு ஜென்மம் போதாது மகளே!!!
இறைவன் அவனுக்கு பிடித்தவர்களை சீக்கிரமே
தன்னுடனேயே கூப்பிட்டு விடுவானாம்,
இத்தனை நல்ல குணம் படைத்த உன்னையும் அவன்,
தன்னிடமே அழைத்து விட்டான்,
நீ அந்த இறைவனின் பாதர விந்தங்களில் இளைப்பாறு மகளே!
உனது ஆத்மா சாந்தியடையட்டும்.

ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இதய அஞ்சலி

அன்புநல் அடக்கம் மேன்மை,
அறிவினால் சிறந்த ஞானம்,
குன்றினைபோல் உயர்ந்த,
குணமது தெளிந்த கூற்று,
தன்னலம் பாரா உள்ளம்,
தளர்விலா உழைப்பு மேன்மை,
துன்புற கண்டு உள்ளம்,
துவண்டிடும் இனிய நெஞ்சம்,
தாயை போல எவர்க்கும்,
தக்க பல அறிவுரைகள்,
சிந்தை இனிக்க சொல்லும்,
சிங்கார சொல்வழக்கு,
விந்தை மனிதர் பலர்,
வீற்றிருக்கும் பூமியிலே,
எந்தை தமிழ் அன்னை,
ஏற்றி வைத்த பொற்தீபம்,
புன்னகை இதழின் ஓரம்,
பூத்திட்ட மக்கள் தன்மை,
தன்வசம் ஆக்கிக்கொண்ட,
தன்னகரில்லா தீபம்,
எம்மையெல்லாம் ஆறாத்துயர் கடலில்,
ஓய்வின்றித் தவிக்க விட்டு,
ஓய்ந்து விழிமூடி விட்டாய்,
பாய்ந்துவிடும் வெள்ளமதில்,
பரிதவிக்கும் உயிரினம் போல்,
மாய்ந்து அழ வைத்து விட்டு,
மறு உலகம் சென்று விட்டாய்,
புண்பட்டு நெஞ்சமெல்லாம்,
புலம்பி நிதம் அழுவதன்றி,
மண்மீது நாமுமக்கு,
மாறென்ன செய்வதையா!

சகோதரர்மார், சகோதரிமார்,
மச்சான்மார், மச்சாள்மார்,
பெறாமக்கள், மருமக்கள்
உற்றார், உறவினர் மற்றும் நண்பர்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நன்றி நவில்கின்றோம்

எமது குடும்ப விருட்சமாக விரிந்து படர்ந்து நிழல் தந்த எங்கள் அன்புத் தெய்வம் **திருமதி பிருந்தா குணசேகரம்** அவர்களின் அமரத்துவத்தால் தாங்கொணாத்துயரத்தில் நாமிருந்த வேளைகளில் ஓடோடி வந்து எமது துயரத்தில் பங்கேற்று ஆறுதல் அளித்தோர், அனுதாபங்களை தெரிவித்து அளவற்ற அன்போடு அரவணைத்தோர், தொலைபேசி மூலமாக எங்களின் துயரோடு தங்களின் துயரையும் பகிர்ந்து கொண்டோர் அனைவருக்கும் நாம் நன்றி தெரிவிப்பதோடு அஞ்சலி செலுத்தியோருக்கும் மற்றும் இறுதிக் கிரியைகளில் கலந்து கொண்ட உற்றார், உறவினர், நண்பர்கள், உற்ற நேரத்தில் உதவிகள் புரிந்தவர்களுக்கும், அந்தியேட்டி சபிண்டீகரணத்தில் கலந்து அன்னாரின் ஆத்மசாந்திக்காகப் பிரார்த்தித்தவர்களுக்கும், இம்மலரினை அழகுற வடிவ மைத்து அச்சுப்பதிவு செய்த ஜே.ஆர். அச்சகத்தினருக்கும் எமது இதயபூர்வமான நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

நன்றி

**என்றும் அன்புடன்**

**குடும்பத்தினர்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கீதாசாரம்



எது நடந்ததோ,
அது நன்றாகவே நடந்தது,
எது நடக்கிறதோ, அது நன்றாகவே நடக்கிறது,
எது நடக்க இருக்கிறதோ,
அதுவும் நன்றாகவே நடக்கும்,
உன்னுடையதை எதை இழந்தாய்?
எதற்காக நீ அழுகிறாய்?
எதை நீ கொண்டு வந்தாய், அதை நீ இழப்பதற்கு?
எதை நீ படைத்திருந்தாய், அது வீணாவதற்கு?
எதை நீ எடுத்துக் கொண்டாயோ,
அது இங்கிருந்தே எடுக்கப்பட்டது.
எதை கொடுத்தாயோ,
அது இங்கேயே கொடுக்கப்பட்டது.
எது இன்று உன்னுடையதோ,
அது நாளை மற்றொருவருடையதாகிறது.
மற்றொரு நாள், அது வேறொருவருடையதாகும்
இதுவே உலக நியதியும்
எனது படைப்பின் சாரம்சமுமாகும்

**பகவான் ஸ்ரீ கிருஷ்ணர்**



**Designed & Printed @ JR Print, London**
**Tel: 00 44 208 503 6643**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org